உ

சிவமயம்.

# பாம்பாட்டிச் சித்தர்

# பாடல்.



இ. ராமசாமிக் கோன்,

புத்தக வியாபாரம்,

வடக்காவணிமூல வீதி, மதுரை.


இதன் விலை ] 1938. அணா 2.

உ

கடவுள் துணை.

# பாம்பாட்டிச் சித்தர்

## பாடல்.





இ. ராமசாமிக் கோன்,

புத்தக வியாபாரம், வடக்காவணிமூலவீதி, மதுரை.

---

தன் விலை] 1938. [அணா 2.

மதுரை, எக்ஸெல்ஸியர் பவர் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

கடவுள் துணை.

# பாம்பாட்டிச் சித்தர் பாடல்.

## கடவுள் வணக்கம்.

தெளிந்துதெளிந்துதெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடுபாம்பேதெளிந் தாடுபாம்பே-சிவன்
அடியிணைக்கண்டோமென் றாடுபாம்பே. 1

நீடுபதநமக்கென்றுஞ் சொந்தமென்றே
நித்தியமென்றேபெரு முத்தியென்றே
பாடுபடும்போதுமாதி பதநினைந்தே
பன்னிப்பன்னிப்பரவிநின் றாடுபாம்பே. 2

பொன்றிலொளிபோலவெங்கும் பூரணமதாய்
பூவின்மணம்போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளலடிவணங்கிநின் றாடுபாம்பே. 3

எள்ளிலெண்ணெய்போலவுயி ரெங்குநிறைந்த
ஈசபதவாசமல ரெண்ணியெண்ணியே.
உள்ளபடியானபத்தி யோங்கிநிற்கவே
ஒடுங்கியடங்கித்தெளிந் தாடுபாம்பே. 4

அண்டபிண்டந்தந்தவெங்க ளாதிதேவனை
அகலாமலேநினைத் தன்புடனேபணிந்
தெண்டிசையும்புகழ்ந்திட வேத்தியேத்தி
ஏகமனமாகநாடி யாடுபாம்பே. 5

சோதிமயமானபரி சுத்தவஸ்துவைத்
தொழுதழுதாவலறித் தொந்தோமெனவே

நீதிதவறுவழியி னின்றுநிலையாய்
நினைந்துநினைந்துருகி யாடுபாம்பே. 6

அருவாயுமுருவாயு மாதியாயும்
அந்தமாயுமொளியாயு மாகமமாயும்
திருவாயுங்குருவாயுஞ் சிவனாயும்
தெரிந்தவஸ்துவைப்போற்றி யாடுபாம்பே. 7

சுட்டிக்காட்டவொண்ணாத பாழ்சூனியந்தனைச்
சூட்சமதியாலறிந்து தோஷமறவே
எட்டிப்பிடித்தோமென்று னந்தபாம்பை
யெடுத்துவிரித்துநின் றாடுபாம்பே. 8

எவ்வுயிருமெவ்வுலகு மீன்றும்பறப்பாய்
இருந்துதிருவிளையாட் டெய்தியும்பின்னர்
அவ்வுயிருமவ்வுலகு மாகியுநின்ற
ஆனந்தவெள்ளங்கண் டாடுபாம்பே. 9

குரு வணக்கம்.

சாற்றுமுடல்பொருளாவி தத்தமாகவே
தானம்வாங்கிநின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றிமனம்வாக்குக்காய மூன்றும் பொருந்தப்
புகழ்ந்துபுகழ்ந்துநின் றாடாய்பாம்பே. 10

பொய்மதங்கள்போ தனைசெய் பொய்குருக்களைப்
புத்திசொல்லிநன்னெறியிற் போகவிடுக்கும்
மெய்மதந்தானின்னதென்று மேவவிளம்பும்
மெய்க்குருவின் பதம்போற்றி யாடாய்பாம்பே. 11

வேதப்பொருளின்னதென்று வேதங்கடந்து
மெய்ப்பொருளைக்கண்டுமன மேவிவிரும்பிப்
போதப்பொருளின்னதென்று போதனைசெய்யும்
பூரணசற்குருதாள்கண் டாடாய்பாம்பே. 12

உள்ளங்கையிற்கனிபோல வுள்ளபொருளை
உண்மையுடன்காட்டவல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந்தன்னைத் தள்ளிகொண்டன்பாய்க்
களித்துக்களித்துநின் றாடுபாம்பே. 13

அங்கையிற்கண்ணாடிபோல வாதிவஸ்துவை
அறிவிக்குமெங்களுயி ரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
தமனியபடமெடுத் தாடாய்பாம்பே. 14

காயநிலையழிகையைக் கண்டுகொண்டபின்
கற்புநிலையுள்ளிற்கொண்டெக் காலமும்வாழும்
தூயநிலைகண்டபரி சுத்தகுருவின்
துணையடிதொழுதுநின் றாடாய்பாம்பே. 15

கூடுவிட்டுக்கூடுபாயுங் கொள்கையுடைய
குருவின்வல்லபமெவர் கூறவல்லவர்
வீடுபெறும்வகையை மேன்மேலுங்காட்டு
மெய்க்குருவைப்பணிந்துநின் றாடுபாம்பே. 16

அட்டதிக்குமண்டவெளி யானவிடமும்
அடக்கியகுளிகையோ டாடிவிரைவாய்
வட்டமிட்டுவலம்வரும் வல்லகுருவின்
மலரடிதஞ்சமென் றாடாய்பாம்பே. 17

கற்பகாலங்கடந்தாதி கர்த்தாவோடுங்
கடமழியாதுவாழுங் காரணக்குரு
பொற்பதமேதஞ்சமென்று போற்றுதல்செய்து
பூரணசிந்தையோ டாடாய்பாம்பே. 18

வச்சிரத்தாற்கோர்பழுது வாய்க்குமாயினும்
வல்லுடம்புக்கோர்குறை வாய்த்திடாது

மெச்சகடமுள்ளவெங்கள் வேதகுருவின்
மெல்லடிதுதித்துநின் றாடாய்பாம்பே. 19

நாதர்முடிமேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையைவைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்தில் குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப்பாடிநின்றுவிளை யாடுபாம்பே 20

வளைபுகும்போதேதலை வாங்கும்பாம்பே
மண்டலமிட்டுடல்வளை வண்ணப்பாம்பே
தடைக்கஞ்சிநின்றிடும் சத்தியப்பாம்பே
தலையெடுத்தேவிளை யாடுபாம்பே. 21

குற்றமற்றசிவனுக்குக் குண்டலமானாய்
கூறுந்திருமாலினுக்குக் குடையானாய்
கற்றைகுழற்பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாமலுள்ளங்களித் தாடுபாம்பே. 22

மண்டலத்தைத்தாங்குமிக வல்லமைகொண்டாய்
மாயனுக்குப்படுக்கைக்கு வண்ணப்பாம்பானாய்
கண்டபடைநடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக்கொண் டாடுபாம்பே. 23

சந்திரனைச்சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந் தானுமானாய்
மந்திரத்தாற்கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்துநின் றாடுபாம்பே. 24

## சித்தர் வல்லபங்கூறல்.

எட்டுநாகந்தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனுலகத்தை யிங்கேகாட்டுவோம்
கட்டுக்கடங்காதபாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந்தன்னைக்கக்கி யாடுபாம்பே. 25

ஆதிசேடனாகினுமெங்கள் கையினாலே
ஆட்டிவிடுவோமெங்க ளாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றாடச்செய்வோம்
நின்றநிலைதவறாம லாடுபாம்பே. 26

தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச்செய்வோம்
துரும்பைப்பெருந்தூணாகத் தோற்றச்செய்வோம் [ம்
ஆணைப்பெண்ணும்பெண்ணையாணு மாகச்செய்வோ
ஆரவாரித்தெதிராய்நின் றாடுபாம்பே. 27

எட்டுமலைகளைப் பந்தாயெடுத்தெறிவோம்
ஏழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம்
மட்டுபடாமணலையு மதித்திடுவோம்
மகாராஜன்முன்னேநின் றாடுபாம்பே. 28

மண்டலமுற்றுங்கையால் மறைத்திடுவோம்
வானத்தையும்வில்லாக வளைத்திடுவோம்
தொண்டருக்குசூனியஞ் சொல்லிக்காட்டுவோம்
தோன்றலுக்குமுன்புநின் றாடுபாம்பே. 29

மூண்டெரியுமக்கினிக்குள் மூழ்கிவருவோம்
முந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம்
தாண்டிவரும்வன் புலியைத் தாக்கிவிடுவோம்
தார்வேந்தர்முன்புநின் றாடுபாம்பே. 30

செப்பரியமூன்றுலகஞ் செம்பொன்னாக்குவோம்
செங்கதிரைத்தண்கதிராய்ச் செய்துவிடுவோம்
இப்பெரியவுலகத்தை இல்லாமற்செய்வோம்
எங்கள்வல்லபங்கண் டாடுபாம்பே. 31

வேதன்செய்தசிருஷ்டிகள்போல் வேறுசெய்வோம்
வேதனையுமெங்கள்கீழே மேவச்செய்வோம்.

நாதனுடன்சமமாக நாங்களும்வாழ்வோம்
எங்கள்செய்கையிதுவென் றுடாய்பாம்பே: 32

அறுபத்துநாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமேலொருகலை யானதறிந்தோம்
மறுபற்றுசற்றுமில்லா மனமுடையோம்
மன்னனேயாசானென் றுடுபாம்பே. 33

சிறுபுலியானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குற்றேவல் செய்யச்சொல்லுவோம்
வீறுபெறுங்கடவுளை யெங்களுடனே
விளையாடச்செய்வோமென் றுடாய்பாம்பே. 34

சித்தர் சமவாதம்.

வாசுகியையொருபக்க மன்னநிறுத்தி
மகத்தானபதுமனை மறுபக்கம்வைத்து
தேசுலவுதக்கனைத் தென்றிக்கிற்சேரு
செய்யபதுமனைக்கொள் சித்தனுரே. 35

அனந்தனையொருபக்க மாகநிறுத்தி
அதன்பக்கங்குளிகனை யண்டச்சேரு
கனங்கொண்டகார்க்கோடகன் காணக்காட்டுங்
கடுஞ்சங்கபாலனைத்தா சித்தனுரே. 36

அட்டதிக்குஞ்சக்கரங்க ளாகக்கீறி
அக்கோணநிலைகளி லக்கரஞ்சேரு
திட்டமுடன்மந்திரத்தைச் செபித்துநில்லு
சிந்தந்தடுமாறுதே சித்தனுரே. 37

அட்டதிக்குஞ்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
அவ்வவற்றிற்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
எட்டுநாகமிருக்கின்ற விடத்தில்விட்டோம்
இனியென்னசெய்வதுசொல் சித்தனுரே. 38

நடுவாகவாதிசேடன் றன்னைநாட்டு
நான்குதிக்கும்மந்திரித்த நீறுதூவு
கடுவிஷங்கக்கவே கட்செவிகளைக்
கையிலெடுத்தாட்டுங்கள் சித்தனுரே. 39

பொருளாசை விலக்கல்.

நாடுநகர்வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுது நாடிவருமோ
கூடுபோனபின்பவற்றாற் கொள்பயனென்னே
கூத்தன்பதங்குறித்துநின் றாடாய்பாம்பே. 40

யானைசேனைதேர்ப்பரி யாவுமணியாய்
யமன்வரும்போது துணை யாமோவறியாய்
ஞானஞ்சற்றுமில்லாத நாய்கட்குப்புத்தி
நாடிவரும்படிநின் றாடுபாம்பே. 41

மாணிக்கமாமணிமுடி வாகுவலயம்
மார்பிற்றுலங்கும்பதக்கங்கண் மற்றும்பணிகள்
ஆணிப்பொன்முத்தாரம்பொன் தந்தக்கடகம்
அழிவானபொருளென் றாடாய்பாம்பே. 42

மாடகூடமாளிகைகள் வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்தவரண்களை முற்றுமுள்ளவை
கூடவாராதென் றவந்தக் கொள்கையறிந்தோர்
குறவாமல்வெறுப்பாரென் றாடாய்பாம்பே. 43

மலைபோன்றசெம்பொற்குவை வைத்திருப்பவர்
மறலிவருகையில் வாரிச்செல்வரோ
அலையாமலகத்தினை யத்தன்பால்வைத்தோம்
அழியாரென்றேதுணிந் தாடாய்பாம்பே. 44

பஞ்சணையும்பூவணையும் பாயலும்வெறும்
பாழ்சுடுகாடதனிலே பயன்பெறுமோ

மஞ்சள்மணம்போல்சுடு நாறுமணங்கள்
வருமென்றுதெளிந்துநின் றூடாய்பாம்பே 45
முக்கனியுஞ்சர்க்கரையு மோதகங்களும்
முதிர்சுவைப்பாண்டங்களு முந்தியுண்டவாய்
மிக்கவுயிர்போனபின்பு கண்ணைவிழுங்க
மெய்யாகக்கண்டோமென் றூடாய்பாம்பே. 46
வண்ணப்பட்டுவாசனையும் வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன்யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவரமாட்டாதென் றூடாய்பாம்மே. 47
மக்கள்பெண்டிர்சுற்றமரு மக்கள்மற்றவர்
மாளும்போதுகூடவவர் மாள்வதில்லை
தக்கவுலகனைத்தையுந் தந்தகர்த்தனைத்
தாவித்தாவித்துதித்துநின் றூடாய்பாம்பே. 48
கானலைமானீரெனவே கண்டுசொல்லல்போல்
காசினிவாழ்வினைமூடர் கண்டுகளிப்பர்
மேனிலைகண்டார்கள்வீணும் வீம்புபேசிடார்
மெய்யென்பதனுடுவாரென் றூடாய்பாம்பே. 49

## பெண்ணாசை விலக்கல்.

வெயில்கண்டமஞ்சள்போன்ற மாதரழகை
விரும்பியேமேல்விழுந்து மேவுமாந்தர்
ஒயில்கண்டஇலவுகாத் தோடுங்கிளிபோல்
உடல்போனாலோடுவாரென் றூடாய்பாம்பே. 50
செண்டுமுலைவண்டுவிழி கொண்டதோகையைச்
சித்தப்பாம்பால்விழுங்கியே சீயென்றெரித்தோம்
குண்டுகட்டெருமையேறுங் கூற்றுப்பறந்தையைக்
கொன்றுதின்றுவிட்டோமென் றூடாய்பாம்பே. 51

வட்டமுலையென்றுமிக வற்றுந்தோலை
மகமேருவென்றுவமை வைத்துக்கூறுவர்
கெட்டநாற்றமுள்ளயோனிக் கேணியில்விழுந்தார்
கெடுவாரென்றேதுணிந் தாடாய்பாம்பே. 52

மலஞ்சொரிகண்ணை வடி வாளுக்கொப்பாக
வருணித்துச்சொல்வர்மதி வண்மையில்லாதவர்
குலநலம்பேசுகின்ற கூகைமாதர்கள்
கும்பிக்கேயிரையென் றாடாய்பாம்பே. 53

சிக்குநாறுங்கூந்தலைச் செழுமேகமாய்
செப்புவார்கள்கொங்கைதனைச் செப்புக்கொப்பதாய்
நெக்குநெக்குருகிப்பெண்ணை நெஞ்சில்நினைப்பார்
நிமலனைநினையாரென் றாடாய்பாம்பே. 54

நாறிவருமெச்சிதனை நல்லமுதென்று
நண்ணுஞ்சளிநாசிதனை நற்குமிழென்று
கூறுவார்கள்புத்தியில்லாக் கூகைமாந்தர்
கோதிலையையறியாரென் றாடாம்பாம்பே. 55

மயிலென்றுங்குயிலென்றும் மாணிக்கமென்றும்
மானேயென்றுந்தேனேயென்றும்வானமுதென்றும்
ஒயிலானவன்னமதிற் கொத்தவளென்றும்
ஓதாமற்கடிந்துவிட் டாடுபாம்பே. 56

மின்னற்கொடியென்றுஞ் சோதிவிளக்கமென்றும்
மெல்லியென்றும்வல்லியென்றும்மேனகையென்றும்
கன்னற்கட்டியென்றுஞ்சீனி கற்கண்டென்றும்
கழறுமற்கடிந்தோமென் றாடாய்பாம்பே. 57

பூவையென்றும்பாவையென்றும்பொன்னேயென்று
பூந்திருவேயென்றுமென்றன்பொக்கிஷமென்றும் [ம்
கோவையென்றுங்கோதையென்றுங் கோகிலமென்
றும், கூறுமற்றுறந்தோமென் றாடாய்பாம்பே. 58

மலக்குடமீதிலே மஞ்சள்பூச்சென்றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல் நிணத்தோலென்றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல் நிணத்தோலென்றும்
தானறிந்துதள்ளினோமென் றாடாய்பாம்பே. 59

## சரீரத்தின் குணம்.

ஊத்தைக்குழியிலே மண்ணையெடுத்தே
உதரப்புனலிலே யுண்டைசேர்த்தே
வாய்த்தகுயவனார் பண்ணும்பாண்டம்
வரகோட்டுக்குமாகாதென் றாடாய்பாம்பே. 60

இருவர்மண்சேர்த்திட வொருவர்பண்ண
ஈரைந்துமாதமாய் வைத்தகூலி
அருமையாயிருப்பினு மந்தக்கூலி
அரைக்காசுக்காகாதென் றாடாய்பாம்பே. 61

பரியாசம்போலவே கடித்தபாம்பு
பலபேரறியவே மெத்தவீங்கிப்
பரியாரமொருமாது பார்த்தபோது
பையோடேகழன்றதென் றாடாய்பாம்பே. 62

சீயுமலமுஞ்செந் நீருநிணமுஞ்
சேர்ந்திடுநாற்றக் குடமுடைந்தால்
நாயுநரியும் பேயுங்கழுகும்
நமதென்றேதின்னுமென் றாடாய் பாம்பே. 63

நீரிலேநீர்க்குமிழி நிலைகள்போல
நில்லாவுடல்நீங்கிவிடு நிச்சயமென்றே
பாரிற்பலவுயிர்களைப் படைத்தவன்றனைப்
பற்றவேபற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. 64

நாறுமீனைப்பலதர நல்லதண்ணீரால்
நாளுங்கழுவினுமத னாற்றம்போமோ

கூறுமுடல்பலநதி யாடிக்கொண்டதால்
கொண்டமலநீங்காதென் றாடாய்பாம்பே. 65

காய்த்தமரமிதுமிகக் கல்லடிபடும்
கன்மவினைகொண்டகாயங் கண்டனைபெறும்
வாய்த்ததவமுடையவர் வாழ்பவரென்றே
வஸ்துத்திருவடிதொழு தாடாய்பாம்பே. 66

பேசரியநவவாயிற் பீறற்றுருத்தி
பெருங்காற்றுக்குள்புகுந்தாற் பேச்சுண்டாச்சே
சனிலையறியாருக் கிந்தத்துருத்தி
எரிமண்ணிற்கிறையென் றாடாய்பாம்பே. 67

மரப்பாவைபோலவொரு மண்ணுருச்செய்து
வளமானசீவனென்னுஞ் சூத்திரமாட்டித்
திரைக்குள்ளிருந்தசைப்பேன் நீர்ந்தபொழுதே
தேகமவிழுமென்றுதெளிந் தாடுபாம்பே. 68

தசநாடிநவவாயு சத்ததாது
சார்ந்தமரக்கப்பலது தத்திவிழுமே
இசைவானகப்பலினை யேகவெள்ளத்தில்
என்னாளுமோட்டத்துணிந் தாடாய்பாம்பே. 69

அகப்பற்று நீக்கல்.

தாமரையிலையிலே தண்ணீர்தங்காத
தன்மைபோலச்சகத்தாசை தள்ளிவிட்டெங்கும்
தூமணியாவிளங்கிய சோதிபதத்தைத்
தொழுதுதொழுதுதொழு தாடாய்பாம்பே. 70

கள்ளங்கொலைகாமவாதி கண்டித்ததெல்லாம்
கட்டறுத்துவிட்டு ஞானக்கண்ணைத்திறந்து
தெள்ளிதானவெட்டவெளி சிற்சொரூபத்தைத்
தேர்ந்துபார்த்துநின்றுதெளிந் தாடாய்பாம்பே. 71

சொல்லும்புளியம்பழத்தி னோடுபோலவே
சுற்றத்திருந்தாலுமவர் தொந்தங்களற்று
நில்லுமனதேபர நின்மலத்திலே
நின்றுனைநான்வெறும்பாழென் றூடாய்பாம்பே. 7

சேற்றிற்றிரிபிள்ளைப்பூச்சி சேற்றைநீக்கல்போல்
தேசத்தோடொத்துவாழ்பவரைச் செய்கைகண்டபி[ன்]
சாற்றுபரவெளிதனைச் சாரும்வழியே
தானடக்கவேணுமென் றூடாய்பாம்பே. 7

எண்ணெய்க்குந்தண்ணீருக்குந் தொந்தமில்லாவாறு
எப்போதும்புவியி லெய்தவேண்டும் [போல]
கண்ணுக்குக்கண்ணனவொளி கண்டுகொள்ளவே
கட்டறுத்துவாழ்ந்திடநின் றூடாய்பாம்பே. 7

கக்கிவிட்டசோறுகறி கந்தமூலங்கள்
கண்களுக்கசுத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்டசகத்தினைச் சீயென்றெறுத்துச்
சீர்பாதங்காணத்தெளிந் தாடாய்பாம்பே. 7

கோபமெனுமதயானை கொண்டுமதத்தை [ஞ்]
கூர்கொள்புத்தியங்குசத்தாற் கொன்றுவிட்டோங்கா
தீபமெனுஞ்சிற்சொரூப செய்யபொருளைச்
சேர்ந்துறவுகொண்டோமென் றூடாய்பாம்பே. 7

நித்தியமென்றுமலையினின்று கொண்டோம்யாம்
நினைத்தபடிமுடித்துநின் மலமானோம்
சத்தியமாயெங்கள்சடந்தா னழியாதே
சந்ததமும்வாழ்வோமென் றூடாய்பாம்பே. 7

மனமென்னுங்குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம் வாயிற்பூட்டிச்

சினமென்னுஞ்சீனிமேற் சீராயேறித்
தெளிவிடஞ்சாரிவிட் டாடாய்பாம்பே. 78

ஆசையென்னுஞ்செருப்பின்மே லடியைவைத்தே
ஆங்காரமுட்காட்டை யவமிதித்தே
காசையென்னுந்துற்குணத்திற் கனல்கொழுத்திக்
காலாகாலங்கடந்தோமென் றாடாய்பாம்பே. 79

காலனெனுங்கொடிதான கடும்பகையைக்
கற்பமெனும்வாளினாற் கடிந்துவிட்டோம்
தாலப்பிறப்பினைத் தான்கடந்தோம்
தற்பரங்கண்டோமென் றாடாய்பாம்பே. 80

தேனில்வீழ்ந்தயீயைப்போலச் சிந்தைகுலைந்து
திகையாமற்சிற்சொரூப தெரிசனைக்கண்டு
வானிற்பறந்திடச்சூத வானமதுதீர்ந்து
வாயிற்போட்டேகநின் றாடாய்பாம்பே. 81

தூக்கியபாதங்கண்டேன் சோதிகண்டேன்
சுத்தவெளிக்குள்ளேயொரு கூத்தன்கண்டேன்
தாக்கியசிரசின்மேல் வைத்தபாதம்
சற்குருவின்பாதமென் றாடாய்பாம்பே. 82

ஆலடிப்பொந்திலே வாழ்ந்தபாம்பே
அரசடிப்பொந்திலே புகுந்துகொண்டாய்
வாலடிதன்னிலே பார்த்துப்பார்த்து
வாங்கியேதூக்கிநின் றாடாய்பாம்பே. 83

நாலுதெருவிலே நாலுகம்பம்
நடுத்தெருவிலே பொன்கம்பம்
போலும்விளங்குபொன் கம்பத்தினுக்கே
பூமாலைசூட்டிநின் றாடாய்பாம்பே. 84

ஆழிபெயர்ந்தாலுமேரு மட்டேயலையும்
அடியோடுபெயர்ந்தாலு மன்றிக்கால
ஊழிபெயர்ந்தாலுமாதி யுண்மைப்படிக்கே
உறுதிபெறுதுநின் ருடாய்பாம்பே. 85

வாயுவினையிரையாக வாங்கியுண்டே
வருடிக்குநீரினைவா யுண்மடுத்தே
தேயுபிறைகுளிர்காய்ந்து வெட்டவெளியிலே
திகைப்பறச்சேர்ந்துநின் ருடாய்பாம்பே. 86

மாசில்கதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெரும்பட மடல்விரித்தே
ஆசில்பராபரமான வாதிபதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்பாம்பே. 87

காடுமலைநதிபதி காசிமுதலாய்க்
கால்கடுக்கவோடிற்பலன் காணலாகுமோ
வீடுபெறும்வழிநிலை மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் ருடாய்பாம்பே. 88

எள்ளளவுமன்பகத்தி லில்லாதார்முத்தி
எய்துவதுதொல்லுலகி லில்லையெனவே
கள்ளப்புலன்கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித்தாடாய் பாம்பே. 89

சூரியனைக்கண்டபனி தூர வோடல்போல்
சொந்தபந்தஞ்சித்தபரி சுத்ததலத்தில்
ஆரியனைக்கண்டுதரி சித்தேயன்புடன்
அகலாமறப்பற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. 90

காந்தம்வலியிரும்புபோல் மாசின்மனத்தைக்
காட்சியானவஸ்துவுடன் கலக்கச்சேர்த்துச்
சாந்தமுடன்றேண்டியின் தாம்புப்போலச்
சலியாமற்றொடர்ந்துநின் ருடாய்பாம்பே. 91

உளியிட்டகற்சிலையி லுண்டோபலன்கள்
உலகத்தின்மூடர்களுக் குண்டோவுணர்ச்சி
புளியிட்டசெம்பிற்குற்றம் போமோவஞ்ஞானம்
போகாதுமூடர்க்கென் றாடாய்பாம்பே. 92

திரளானபோரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காதுதேசாசார தேசிகர்தம்மால்
அருளானமூலகுரு வையர்செயலால்
ஆனந்தங்கொண்டோமென் றாடாய்பாம்பே. 93

எட்டுச்சுரக்காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தலில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி னாளும்பூசித்தே
நாதன்பாதங்காணார்களென் றாடாய்பாம்பே. 94

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறப்பார்
தன்னையொருகடவுளைப் பேணநினையார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றாடாய்பாம்பே. 95

பாலிற்சுவைபோலுமெங்குஞ் சார்ந்தவொளியைப்
பற்றுப்பொன்பற்றவைத்த பான்மைபோலே
காலிற்சுழிமுனைநின் று கண்டுகொண்டு
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே. 96

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தங்கொண்டனமித் தேசவாழ்வினை
ஒக்காளமென்றெண்ணி யோசையுடனீ
உள்ளங்தெளிந்துநின் றாடாய்பாம்பே. 97

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரம்புராணங்களைச் சாற்றுமாகமம்
விதவிதமானதான வேறுநூல்களும்
வீணானநூல்களென் றாடாய்பாம்பே. 98

சமயபேதம்பலவான சாதிபேதங்கள்
சகத்தோர்க்கேயல்லாதுசற் சாதுக்களுக்கோ
சிவமயத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தேர்ந் தாடுபாம்பே. 99

பூசைசெய்தால்சுத்த போதம்வருமோ
பூமிவலஞ்செய்ததனாற் புண்ணியமுண்டோ
ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்றுதுணிந் தாடாய்பாம்பே. 100

மூலவேரறிந்துகொண்டால் மூன்றுலகமும்
முன்பாகவேகண்டுநித்திய முத்திசேரலாம்
சாலவேறறிந்ததாலே தான்பயனுண்டே
சகத்தைப்பொய்யென்றுவெழுந் தாடாய்பாம்பே 101

சகத்தினுதியென்றிடாது தானனுதியாற்
சமைந்ததென்றுரைப்பார்கள் சத்தையறியார்
மகத்துவநிலைகற்ப வண்மையல்லாது
மற்றும்வண்மையில்லையென் றாடாய்பாம்பே 102

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லாநிறைந்திடும் மற்புதசித்தன்
காயமில்லாதோங்கிவளர் காரணசித்தன்
கண்ணுளொளியானுனென் றாடாய்பாம்பே. 103

நாற்பத்துமுக்கோணநிலை நாப்பணதாக
நாடுமக்கரச்சொரூப நாயகன்தனை
மேற்படுத்திக்கொண்டாளந்த மேலுலகெலா
மெல்லடிக்குத்தொண்டேயென் றாடாய்பாம்பே. 104

கண்டவர்களொருக்காலும் விண்டிடார்கள்
விண்டவர்களொருக்காலுங் கண்டிடார்கள்
கொண்டகோலமுள்ளவர்கள் கோனிலைகாணார்
கூத்தாடிக்கூத்தாடி யாடுபாம்பே. 105

ஆறுகலைக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீடுபோகுமுன்னே யரண்கோலிக்கொள்
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாதுகொண் டாடுபாம்பே. 106

எண்ணரியபுண்ணியங்க ளெல்லாஞ்செய்துமென்
ஏகனடி நெஞ்சமதி லெண்ணுவிடிலே
பண்ணரியதவப்பயன் பத்தியில்லையேற்
பாழ்படுமென்று துணிந் தாடாய்பாம்பே 107

எவ்வுலகுஞ்சொந்தமதா யெய்தும்பயனென்
எங்களாதிபதாம்புய மெண்ணுக்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேவருமென்
றெண்ணிக்கர்த்தனடிநினைந் தாடாய்பாம்பே. 108

மணக்கோலங்கொண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்குகின்றாய்
பிணக்கோலங்கண்டும்பின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் றாடாய்பாம்பே. 109

பிறப்பையுமிறப்பையு மறுத்துவிடயான்
பெருமருந்தொன்றுசொல்வேன் பெட்புடன்கேளாய்
சிறப்புடன்மனப்பூட்டுஞ் சிந்தைதக்கதவும்
திறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே. 110

இறந்தவரைவரவ ரிஷ்டமானவர்
எய்துமவரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவரொருவரென்றே மண்ணினிலுள்ளோர்
வகையறிந்திடவேநின் றாடாய்பாம்பே. 111

நான்கடிச் செய்யுள்.

ஆகாரமுதலிலே பாம்பதாக
ஆனந்தவயலிலே படம்விரித்தே

ஊகாரமுதலிலே யொத்தொடுங்கி
ஓடிவகாரத்தி னுக்கைநீட்டிச்
சீகாரங்கடந்ததோர் மந்திரத்தைச்
சித்தப்பிடாரனார் போதஞ்செய்ய
மாசாரப்பிறப்பையும் வேரறுத்து
மாயபந்தங்கடந்தோமென் றாடாய்பாம்பே.
தந்திரஞ்சொல்லுவார் தம்மையறியார்
தனிமந்திரஞ்சொல்லுவார் பொருளறியார்
மந்திரஞ்செபிப்பார்கள் வட்டவீட்டினுள்
மதிலினிச்சுற்றுவார் வாயல்காணார்
அந்தரஞ்சென்றுமே வேர்பிடுங்கி
அருளென்னுஞானத்தா லுண்டைசேர்த்தே.
இந்தமருந்தினைத் தின்பீராகில்
இனிப்பிறப்பில்லையென் றாடாய்பாம்பே. 11

களிமண்ணினாலொரு கப்பல்சேர்த்தே
கனமானபாய்மரங் காணநாட்டி
அளிபுலந்தன்னையே சுக்கானாக்கி
அறிவென்னுமாதாரச் சீனிதூக்கி
வெளியென்னும்வட்டத்தே ருள்ளடக்கி
வேதாந்தக்கடலிலே மெல்லவோட்டித்
தெளிவுறுஞானியா ரோட்டுங்கப்பல்
சீர்பாதஞ்சேர்ந்ததென் றாடாய்பாம்பே. 11

உள்ளத்துக்குள்ளே யுணரவேண்டும்
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
மெள்ளக்கனலை யெழுப்பவேண்டும்
வீதிப்புனலிலே செலுத்தவேண்டும்
கள்ளப்புனலைக் கடிந்துவிட்டுக்
கண்ணுக்குமூக்குமேற் காணநின்று

தெள்ளுபரஞ்சோதி தன்னைத்தேடிச்
சீர்பாதங்கண்டோமென் றாடாய்பாம்பே. 115

ஓங்காரக்கம்பத்தி னுச்சிமேலே
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
ஆங்காரக்கோபத்தை யறுத்துவிட்டே
ஆனந்தவெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
சாங்காலமில்லாமற் றுணுவுடனே
சட்டதிட்டமாகச்சேர்ந்து சாந்தமாகவே
தூங்காமற்றூங்கியே சுகமடைந்து
தொங்தோம்தொங்தோமென் றாடாய்பாம்பே. 116

விரககுடத்திலே பாம்படைப்போம்
வேதாந்தவெளியிலே விட்டாட்டுவோம்
கரணங்களைப்பிடுங்கி யிரைகொடுப்போம்
காலக்கடுவெளிநின் றாட்டுவிப்போம்
துரகந்தனிலேறித் தொல்லுலகெங்கும்
சுற்றிவலம்வந்துநித்தி யசூட்சங்கண்டும்
உரையற்றமந்திரஞ் சொல்லிமீட்போம்
ஒருநான்கும்பெற்றோமென் றாடாய்யாம்பே. 117

காயக்குடத்திலே நின்றபாம்பைக்
கருணைக்கடலிலே தியங்கவிட்டு
நேயச்சுழுமுனை நீருபாய்ச்சி
நித்தியமானவஸ்துவை நிலைக்கநாடி
மாயப்பெருவெளி தன்னிலேறி
மாசற்றபொருளினை வாய்க்கத்தேடி
ஆயத்துறைகடந்தப் பாற்பாழின்
ஆனந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 118

மூலத்தலத்திலே நின்றகருத்தை
முற்றுஞ்சழிமுனை தன்னிலூடே
மேலத்தலத்திலே விந்துவட்டம்
மேலைவழியிலே மேவிவாழும்

பாலத்திதாய்க் கருணையினால்
பரகதிஞான சொரூபமாகி
ஆலச்சயனத்துமா னுடனின்றே
ஆளந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 1
புலனைந்துவீதியில் வையாளியாயும்
புரவியெனுமனதை யொருமைப்படுத்தி
மலபந்தவுலகங் கடந்ததாலே
மன்னுகுருபாதத்தி னிலைநாடித்
தலமைந்துபூலோகங் கடந்ததாலே
சந்திரமண்டலங் கடந்ததாகும்
அலம்வந்துபூலோகக் கடலைநீக்கி
ஆனந்தமாகிநின் றாடாய்பாம்பே. 12
குருவென்னுமாசா னுருவெடுத்துக்
குறியானஞானந் துப்பாக்கியாக்கி
அருளென்னுமருளே யுண்டையாக்கி
ஆனந்தமாகவே யதைக்கடந்தே
மருளென்னும்மாதர்ம நெறிதொட்டு
வாங்காமலெறிந்திட நெட்டையிட்டு
பருவலைக்குள்ளே பட்டதென்றே
பற்றானைப்பற்றிநின் றாடாய்பாம்பே. 12
கன்னான்குகையிலே கான்மறிப்போம்
கருமானுலையிலே தீமூட்டுவோம்
சொன்னார் தலையிலே பொன்னாக்குவோம்
சுருதியறுகல்வி யொப்பஞ்செய்வோம்
மின்னார்கள்பாசத்தை விட்டெரிப்போம்
மெய்ப்பொருட்குறிகண்டு விருப்படைவோம்
பன்னாதேபன்னாதே சும்மாவிரு
பராபரஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 12
சாதிப்பிரிவிலே தீமூட்டுவோம்
சந்தைவெளியினிற் கோல்நாட்டுவோம்

வீதிப்பிரிவினில் விளையாடுவோம்
வேண்டாதமனையி லுறவுசெய்வோம்
சோதித்துலாவியே தூங்கிவிடுவோம்
சுகமானபெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிப்பிரமாக்க ளாங்துபேரும்
அறியார்களிதையென் றாடாய்பாம்பே 123

நெட்டெழுத்ததனிலே நிலைபிடித்து
நீங்காவெழுத்திலே வாலைமுறுக்கி
விட்டவெழுத்திலே படம்விரித்து
விண்ணின்வழியிலே மேவியாடிப்
பட்டவெழுத்தையும் பதிந்திருப்போம்
பன்னிரண்டாமெழுத்தினிற் பன்னிக்கூடி
திட்டமுடனெமக்கரு டேசிகனார்தன்
சீர்பாதஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 124

ஊசித்துளைக்குடத்தினிற் பாம்பையடைப்போம்
உலகெலாஞ்சுற்றி யுலாவிவருவோம்
மாசுள்ளபிறவியை மறந்திருப்போம்
மனமொத்தவேளையிலே விட்டாட்டுவோம்
மாசுப்புலன்களை யிரைகொடுப்போம்
மனதுற்றஉச்சியி லேறியாடுவோம்
பேசுமெழுத்தையும் விழுங்கவிடுவோம்
பிறப்பிறப்பற்றோமென் றாடாய்பாம்பே. 125

ஆணிக்குடத்திலே பாம்பையடைப்போம்
அக்கினிக்கோட்டைமே லேறப்பார்ப்போம்
மாணிக்கத்தூணின்மேல் விட்டாட்டுவோம்
மனம்வாக்குகாயத்தை யிரைகொடுப்போம்
நாணிக்கயிற்றையு மறுத்திடுவோம்
நமனற்றநாதன்பத நாடியேநிற்போம்
ஏணிப்படிவழிகண் டேறவிடுவோம்
யாருமிதையறியாரென் றாடாய்பாம்பே. 126

வடக்குக்கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ்சுழலிலே யாவும்பூட்டுவோம்
நடக்கும்வழியிலே யுண்டைசேர்ப்போம்
நடவாவழியிலே புடவைநெய்வோம்
குடக்குக்கரையிலே கொம்புபோடுவோம்
கொய்தலைதளங்குமே விற்றுவிடுவோம்
அடக்கியேகக்கத்துள்ளே வைக்கவும்வல்லோம்
ஆதிபதங்கண்டோமென் றூடாய்பாம்பே. 127

சூத்திரகுடத்திலே பாம்படைப்போம்
சுழிமுனைக்குள்ளே சுகித்திருப்போம்
பாத்திரங்கொண்டுமே பலியிரப்போம்
பத்தெட்டுமூன்று படிகடந்தோம்
ஊத்தைசடலத்தினைப் புடமிடுவோம்
உள்ளவனமக்கு நல்லுறுதிசொல்லப்
பார்த்துரையிதன்மெய் பலிக்கவெண்ணிப்
பதனம்பதனமென் றூடுபாம்பே. 128

மவ்வக்குடத்திலே பாம்படைப்போம்
மணிவட்டவாசியை வாரியுண்போம்
பவ்வக்குடங்களைத் தள்ளிவிடுவோம்
வச்சிரசொற்பனந் தாண்டிவிடுவோம்
மவ்வெளியிலே விட்டாட்டுவோம்
பஞ்சகருவியைப் பலிகொடுப்போம்
சிவ்வுருவாகியே நின்றேமென்றே
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே. 129

பாம்பாட்டிச்சித்தர் பாடல்

முற்றிற்று.

---

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:—1938.